வளன்ஆயம்
நொடிதோறும் புதுமைசேர்
தமிழாய்வுத்துறை
தூய வளனார் கல்லூரி [தன்னாட்சி]
திருச்சிராப்பள்ளி- 620002

# ‘கொல்லிமலை மாசி பெரியண்ணன் - வழிபாடுகள்

**மு. கஸ்தூரி**
முழுநேர முனைவர்பட்ட ஆய்வாளர், தமிழாய்வுத்துறை,
பிஷப் ஹீபர் கல்லூரி (தன்னாட்சி) திருச்சிராப்பள்ளி – 620 017
**முனைவர் மு. இராஜசேகரன்**
நெறியாளர் மற்றும் இணைப்பேராசிரியர், தமிழாய்வுத்துறை
பிஷப் ஹீபர் கல்லூரி (தன்னாட்சி) திருச்சிராப்பள்ளி – 620 017

**ஆய்வுச்சுருக்கம்**

இயற்கையோடு ஒன்றி வாழ்ந்த மனிதன் அச்சங்களின் காரணமாக இயற்கையை வழிபடத் தொடங்கினான். பின்னர் , தம்முடன் வாழ்ந்து தங்களின் சமூகத்திற்காக நற்செயல் செய்து உயிர் துறந்தவர்களையும் , பிற சமூகத்தினரால் துன்புறுத்தப்பட்டு இறந்தவர்களையும் நினைவுகூறும் பொருட்டு அவர்களை வழிபடத் தொடங்கினான். கொடிய நோய்களிலிருந்து தற்காத்துக் கொள்ளவும் வழிபாடு நடத்தினான். இவையே , சிறுதெய்வ வழிபாடாகவும் , பின்னர் மாற்றம் செய்யப்பட்டு பெருந்தெய்வ வழிபாடாக மாறியதை உணர முடிகிறது. எனினும் , கொல்லிமலையிலுள்ள மாசிப் பெரியண்ணனின் செல்வாக்கு அம்மலைகளைப் போல மக்களின் மனங்களில் உயர்ந்தே உள்ளது எனலாம். அத்தகைய மாசிப்பெரியண்ணனுக்கு நிகழ்த்தப்படும் வழிபாடுகளைப் பற்றி அமைவதே இவ்வாய்வுக் கட்டுரையாகும்.

**கலைச்சொற்கள்**

பெரியண்ணன், கொல்லிமலை

**முன்னுரை**

சிறுதெய்வங்களுக்கென இன்றும் நடைமுறையில் சில வழிபாடுகள் கடைப்பிடிக்கப்படுகின்றன. வீட்டுத்தெய்வம் , குலதெய்வம், ஊர்த்தெய்வம், காவல் தெய்வம் எனப் பலவாறாக உள்ளன. எனினும் , சிறு தெய்வங்களைப் பெருந்தெய்வங்களாக மாற்றும் சூழ்நிலையே நடைமுறையில் உள்ளது. **“இன்றைய நிலையில் இந்துத்துவம் என்ற பெயரினால் நாட்டுப்புற வழிபாட்டுக் கூறுகள் மறைகின்ற நிலையை அடைந்துள்ளன”** [1] எனக் கூறுகின்றனர். கையிலாயத்தில் சிவனுக்கும் பார்வதிக்கும் சண்டை நிகழ்ந்த போது , சிவன் கோபித்துக் கொண்டு எங்கோ சென்றுவிட்டார். தங்கையின் வேதனையறிந்த பெருமாளே , மாசிப்பெரியண்ணனாக பூலோசத்திற்கு வருகிறார். உடன் தங்கை பார்வதியும் அன்னக்காமாட்சியாக வருகிறாள். திருச்சி துறையூர் அருகில் வைரிச்செட்டிப்பாளையம் என்னும் ஊரில் வைரச்செட்டியார் ஒருவரின் வீட்டில் தங்கை காமாட்சியை விட்டுவிட்டு சிவனைத் தேடிச் செல்வதாகவும் , பின்னர் பெரியண்ணன் கொல்லிமலையில் தங்கி விட்டதாகவும் கருதுகின்றனர்.

கொல்லிமலையில் பெரியண்ணன் ஒவ்வொரு குன்றாக ஏறி வந்தார் எனவும் , அவையெல்லாம் அவரின் அதீத சக்தியால் நடுக்கம் கொண்டதாகவும் , பின்னர் பெரியண்ணன் மாசி எனும் குன்றில் கால் பதித்து தங்கி விட்டதாகவும் கூறுகின்றனர். இதனாலேயே,

**ஒன்பது குன்றிலே உயர்ந்த குன்றிலே**
**மாசி பெரியண்ண சாமி ……**(முத்துச்சாமி – கொல்லிமலை)

என்ற பாட்டும் உள்ளதாகவும் தெரிவிக்கின்றார்.

**மாசி பெரியண்ணன்**

**“புராணத்தில் கூறப்பெறும் கண்ணனுக்குக் காப்பது தொழில் கறுப்பன் என்ற சிறு தெய்வத்திற்கும் காப்பது தொழிலாகும்**[2] (ஆய்வுக்கட்டுரை).

முதன் முதலில் கொல்லிமலையிலேயே தோன்றியதாகக் கருதப்படும் பெரியண்ணன் சிறு தெய்வங்களுள் காவல் தெய்வங்களான முனீஸ்வரன் , கருப்பன்,

காத்தவராயன் போன்றோர்களுக்கெல்லாம் மூத்தவராகவும் , முதன்மையானவராகவும் உள்ளார். கொல்லிமலையிலுள்ள சிலருக்குப் பெரியண்ணன் குலதெய்வமாகவும் , பெரும்பாலானோருக்கு ஊர்த் தெய்வமாகவும் விளங்குகிறார். தென் மாவட்டங்களிலுள்ள பலருக்கக் குலதெய்வமாக விளங்குகிறார்.

**“மூலக் கோயிலிலிருந்து பிடிமண் எடுத்துவந்து புதிய இடத்தில் உருவாக்கப்படும் - பிடிமண் தெய்வங்கள்”**[3] (ஆறு. இராமநாதன்)

குலப்பாட்டு மக்கள் இங்கிருந்து பிடிமண் எடுத்துச் சென்று தங்கள் ஊர்களில் வைத்து வழிபடுகின்றனர். திருச்சி புளியஞ்சோலையிலுள்ள மாசிப்பெரியண்ணனை சின்னப் பெரியண்ணன் எனவும் , கொல்லிமலையிலுள்ள மா சிப்பெரியண்ணனை பெரிய பெரியண்ணன் என்றும் கூறுவர். பிடிமண் எடுத்துச் சென்று வழிபட்டாலும் , வருடத்திற்கு ஒரு முறையாவது கொல்லிமலை பெரியண்ணனை வழிபட வருவதாகக் குலப்பாட்டு மக்கள் குறிப்பிடுகின்றனர். தற்போதைய நிலையில் கொல்லிமலை சுற்றுலாத் தளமாக மாறி வருவதனை நாம் காண்கிறோம். இந்நிலையில் , சுற்றுலாவிற்கு வெளியூர்களிலிருந்து வரும் மக்கள் அருவிகளில் குளித்து மகிழ்கின்றனர்.

இதனால் அங்குள்ள மலை மக்களும் தங்கள் காடுகளில் விளைவிக்கும் பொருட்களை பெரியண்ணன் மலைக் கோவிலுக்கு செல்லும் பாதைகளில் விற்பனை செய்கின்றனர். மாசிபெரியண்ணன் வெவ்வேறுபட்ட குலங்களுக்கும் குலதெய்வமாக விளங்குகிறார்.

**வழிபாடுகள்**

கொல்லிமலை பெரியண்ணனுக்கு செய்யப்படும் வேண்டுதல்களும் , நேர்த்திக் கடன்களும் சற்றே வித்தியாசமுடையவையாக இருக்கின்றன.

1. நினைத்த காரியம் நிறைவேறும் முன்பு செய்யப்படும் வேண்டுதல்கள்.
2. நினைத்த காரியம் நிறைவேறிய பின்பு செய்யப்படும் நேர்த்திக் கடன்கள்.

பெருந்தெய்வங்கள் நன்மை செய்வன என்றும் சிறு தெய்வங்கள் தீமை செய்வன என்பதும் சிலரின் தவறான கருத்தாகும். உண்மையில் , சிறு தெய்வங்கள் நம் தாய்

தந்தையை ஒத்தவர்கள். தவறு செய்தல் கடிந்து கொள்வதும் , சரியாகச் செய்வதால் பாராட்டுவதுமான தன்மையைக் கொண்டவர்கள். அத்தகு சிறப்பு வாய்ந்த கோபமும் , குணமும் கொண்டவருமே மாசிப்பெரியண்ணன் என்ற நம்பிக்கை மலை மக்களிடமும் , குலப்பாட்டு மக்களிடமும் இருப்பதனைக் காணலாம்.

**1. நினைத்த காரியம் நிறைவேறும் முன்பு செய்யப்படும் வேண்டுதல்கள்.**

**1.1. தொட்டில் கட்டுதல்**

திருமணமாகி நெடுநாள் குழந்தை இல்லாதவர்கள் பெரும்பாலும் பெண் தெய்வங்களிடம் வேண்டி , குழந்தை வரம் கிடைக்க மாலையிலுள்ள பூ ஒன்றை எடுத்து, மஞ்சள் துணியில் வைத்துக் கட்டுவர். சிலர் தயார் செய்யப்பட்டு விற்கும் தொட்டிலை மரத்தில் கட்டுவர். ஆனால் , இவ்விடத்தில் ஆண் தெய்வமாகிய மாசி பெரியண்ணனின் சன்னதியில் குழந்தை வரம் வேண்டி தொட்டில்கள் கட்டியிருப்பதை நாம் காணலாம்.

**1.2. சேவல் குத்தல்**

சிறுதெய்வங்கள் என்றாலே பலியிடுதல் , தீ மிதித்தல் போன்ற வழிபாடுகள் பரவிக் காணப்படும். அதனைப் போல இக்கோவிலிலும் உயிருடன் உள்ள கோழியை வேலில் குத்தும் வினோத வழிபாட்டைக் காண முடிகிறது. இவை மனதிற்கு வேதனை அளித்தாலும் இக்கோவிலின் சிறப்பே இதுதான் என மனம் மகிழ்ந்து குலப்பாட்டு மக்கள் கூறுகின்றனர்.

சொத்துக்களை அபகரித்தவர்கள் , துன்பம் செய்தவர்கள் , துரோகம் இழைத்தவர்கள் போன்றோர்களை நேரடியாக எதிர்க்க இயலாத சாமானிய மக்கள் மாசி பெரியண்ணனிடம் அவர்களை ஒப்படைக்கும் பொருட்டு தகட்டில் விவரத்தை எழுதி அதனை அக்கோழியின் வலது காலில் கட்டி வேலுக்கு முன்பு நின்று எதிரியை நினைத்து குத்துகின்றனர். இதனால் எதிரி அழிந்து விடுவார் என்ற நம்பிக்கையும் உண்டு. மேலும் , துன்பத்தைப் போக்கும் பொருட்டு கோழியை பலியிடுவதாக வும் நம்புகின்றனர்.

**1.3. கல் வீடு அமைத்தல்**

மனிதனாய்ப் பிறந்த ஒவ்வொருவருக்கும் தங்களுக்கென சொந்தான வீடு கட்ட வேண்டும் என்கிற இலட்சியம் இருக்கும். அதன்படி மாசி பெரியண்ணன் சாமி சன்னதியின் அருகிலும் , அம்மலையின் சில இடங்களிலும் வழிபாட்டு மக்கள் பெரிய கற்களையும், சிறிய கற்களையும் அடுக்கி வைத்திருப்பர். இவ்வாறு அடுக்கிய சிறிது காலத்திலேயே வீடு கட்டி விடலாம் என்ற நம்பிக்கையின் அடிப்படையில் இவ்வாறு செய்கின்றனர்.

**1.4. காசு அடித்தல்**

கோவில் என்றிருந்தாலே நிச்சயம் அக்கோவிலில் அதற்கென தலவிருட்சம் இருக்கும். பெரியண்ணன் கோவிலில் மகாகனி எனும் பழமை வாய்ந்த மரமே தல விருட்சமாக உள்ளது. இம்மரத்தில் க்கள் காசுகளை அடிக்கின்றனர். கோவிலில் உண்டியல் இல்லாததால் காசுகளை மரத்தில் அடிப்பதாகவும் சிலர் கூறுகின்றனர்.

**2. நினைத்த காரியம் நிறைவேறிய பின்பு செய்யப்படும் நேர்த்திக் கடன்கள்**

**2.1. வேல் சாட்டுதல்**

தாங்கள் வேண்டிய வேண்டுதல் குறிப்பிட்ட காலத்தில் நிறைவேறியவுடன் மக்கள் தங்களின் பெயர் பொறித்த வேலினைக் காணிக்கையாக சாற்றுகின்றனர். அத்துடன் மு றையாக பொங்கல் , பூசை என அனைத்தையும் படைத்து வேண்டுதல் நிறைவேறிய மகிழ்வில் மன நிறைவாக நன்றி கூறி செல்கின்றனர்.

**2.2. மணி கட்டுதல்**

குழந்தை வரம் வேண்டி தொட்டிலைக் கட்டி , குழந்தை பிறந்தவுடன் குழந்தையின் பெயரால் சிறப்பாக பூசை செய்து , தங்களின் வசதிக்கு ஏற்றவாறு சிறிய அளவு மணி முதல் பெரிய அளவு மணி வரை சாற்றுகின்றனர். அங்குள்ள மணிகளே மாசிப்பெரியண்ணனின் சிறப்புகளுக்கு சான்று எனவும் கூறுகின்றனர்.

**2.3. அருவா சாட்டுதல்**

வேண்டுதல்கள் நிறைவேற்றப்பட்டவுடன் ஆளுயர அருவாளை காணிக்கையாகக் கொடுப்பதனை தொன்றுதொட்ட நம்பிக்கையாகக் கூறுகின்றனர்.

**பிற வழிபாடுகள்**

சாமியாடுதல், பலி கொடுத்தல் , பில்லி சூனியம் வைத்தல் , எடுப்பு வசியம் பண்ணுதல் போன்ற பிற செயல்முறைகளும் இருப்பதாகக் கூறுகின்றனர்.

“திருவிழா தவிர மற்ற நாட்களில் வேண்டுதல் வைத்து கிடா வெட்டுபவர்கள் , கிடாவை வெட்டி இங்கேயே சமைத்துச் சாப்பிட்டுச் செல்கின்றனர்”

**முடிவுரை**

கொல்லிமலையைத் தலைமையிடமாகக் கொண்டு விளங்கும் மாசி எனும் குன்றில் வாழும் பெரியண்ணன் , தன்னை வழிபடுவோரை நன்முறையில் பாதுகாத்து வழிநடத்துவார் என்பதே வழிபாட்டு மக்களின் நம்பிக்கையாகத் திகழ்கிறது.



**சான்றெண் விளக்கம்**

1.ஆறு. இராமநாதன், சிலம்பு நா. செல்வராசு, மாறிவரும் சமூகம், நாட்டுப்புறவியல் ஆய்வுகள், ப.95.

2.பாரதியார் பல்கலைக்கழகம், கோபி வட்டார சிறுதெய்வ வழிபாட்டு முறைகள்,2005.

3.ஆறு. இராமநாதன், தமிழர் வழிபாட்டு முறைகள், 2006.

4.சுகந்தி, கொல்லிமலை பழங்குடி மக்களின் வாழ்வியல் முறைகள், பெரியார் பல்கலைக்கழகம், 2009.

**தகவலாளிகள்**

| வ. எண் | பெயர் | வயது | ஊர் | பாலினம் | வழிபடுவோர் |
|---|---|---|---|---|---|
| 1. | முத்துச்சாமி | 61 | நத்துக்குழிப்பட்டி, கொல்லிமலை | ஆண் | மலைமக்களுள் ஒருவர் |
| 2. | முருகேசன் | 54 | விராலிமலை, திருச்சி | ஆண் | குலப்பாட்டு மக்களுள் ஒருவர் |
| 3. | ஜெயமணி | 42 | குண்டூர் நாடு , கொல்லிமலை | பெண் | மலையில் வியாபாரம் செய்பவர் |
| 4. | சதீஷ் | 30 | மதுரை | ஆண் | சுற்றுலா வந்தவர் |

**துணைநூற்பட்டியல்**


1. ஆறு. இராமநாதன், சிலம்பு நா. செல்வராசு, தன்னனானே பதிப்பகம், முதல் குறுக்குத் தெரு, டிரஸ்ட்புரம், கோடம்பாக்கம், சென்னை-24.

2. ஆறு. இராமநாதன், மணிவாசகர் ஆப்செட் பிரிண்டர்ஸ், சென்னை – 620021.